544

# பழையாறைத் தலவரலாறு



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUN 1957
MADRAS

Q23:38.2119 3
N57
112761

...ல் இராசராசன் அமைத்த
...ாழித் தேவேச்சுர ஆலயம்

5454
2-57

உ

சிவ சிவ

# பழையாறைத் தலவரலாறு

*

கும்பகோணம் நகராட்சி
உயர்நிலைப்பள்ளி, தமிழாசிரியர்,
வித்துவான். சு. சுவர்ணகாளீச்சுரன்
அவர்களால் எழுதப்பெற்றது.

*

பழையாறை தேவஸ்தான வெளியீடு
1957

[உரிமைப் பதிவு]

[விலை 0—8—0]

உ

செந்திலாதிபன் துணை

# பதிப்புரை

இப்பூவுலகின்கண் எல்லாம் வல்ல இறைவனுகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பல உள. சைவ சமயாச்சாரியார்களால் தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்றனவாய் இச்சோழவளநாட்டில் நூற்றுத் தொண்ணூறு தலங்களிருக்கின்றன. அவற்றுள்ளும், காவிரிநதியின் தென்பால் அமைந்துள்ள தலங்கள் நூற்று இருபத்தேழு. அத்தலங்களில் நமது பழையாறையும் ஒன்று. திருமுறையில் இருபத்துநான்காவது திருத்தலமாக வைக்கப்பெற்றிருக்கிறது. சரித்திரப்புகழ்வாய்ந்தது.

இத்தலத்தினது வரலாற்றை வழிபாட்டிற்கு வரும் பேரன்பர்கள் அறிந்து மகிழ்வதற்கு ஏதுவாக "பழையாறைத் தலவரலாறு" என்னும் நூல் வெளிவருகிறது. இவ்வாலயத் திருப்பணி, இந்து அறநிலையப் பாதுகாப்பாளர் உயர்சைவத்திரு A. உத்தண்டராமபிள்ளை B. A., B. L., I. A. S. அவர்களால் துவங்கிவைக்கப்பெறுகிறது. இப்பணிக்கு, தமது இலாக்காவிலிருந்து 15,000 ரூபாய் கொடுத்து உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எங்களது நன்றிகலந்த வணக்கம் உரியதாகுக. இவ்வரலாற்றை எழுதி உதவியவர் கும்பகோணம் நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் ***சு. சுவர்ணகாளீச்சுரன் அவர்கள்*** ஆவார்கள். அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகுக. இந்நூலைக் கண்ணுறும் அன்பர்கள் இத்தலத்திற்கு வந்து சோமகலாநாயகி சமேத சோமநாத சுவாமியை வழிபட்டு, இவ்வாலயத்திருப்பணிக்குத் தங்களாலியன்ற அளவெல்லாம் பேருதவி புரிந்து பெருமானது திருவருளைப்பெற்று, பேரானந்தப் பெருவாழ்வை அடைய வேண்டுகின்றோம்.

சோமநாதஸ்வாமி தேவஸ்தானம்
பழையாறை.
1–5–1957

**G. சுந்தரராச வன்னியர்**
மானேஜிங் டிரஸ்டி.

**N வீரையா இடங்காப்பிறந்தார்**
டிரஸ்டி.

உ
சிவ சிவ

# அணிந்துரை

---

பழையாறை என்று எண்ணுகின்றபோதும், சொல்லுகின்றபோதும், சொல்லக் கேட்கின்றபோதும் நமக்கு ஓர் இன்பம் பிறக்கின்றது. ஏன்? நமது செந்தமிழ் நாட்டின் பழைய வரலாற்றை நினைவூட்டுகின்றது. பொதுவாக மணிமுடிகவித்த மன்னர்களையும், சிறப்பாகச் சோழமன்னர்களையும், அதினிலும் சிறப்பாக, அருண்மொழித் தேவர் என்று அழைக்கப்பட்ட முதலாம் இராச இராசனையும் எண்ணுமாறு செய்கிறது. சைவத்தைக் காத்துக்கொடுத்த மங்கையர்க்கரசி தோன்றிய இடமாயிற்றே என்று நினைந்து நினைந்து உருகுமாறு செய்கிறது. இத்துணையும் செய்வது எது? அதுதான் பழையாறை.

இன்று சிற்றூராகக் காணப்படுகின்ற பழையாறை "தேரின்மேவிய செழுமணி வீதிகள் சிறந்து பாரில் நீடிய பெருமைசேர்பதி"யாக அன்று விளங்கியது. ஐந்து மைல் நீளமும், இரண்டு மைல் அகலமும் உள்ள பெரிய நகரமாக இருந்தது. இப்பெருகளத்தில்தான் இராசராசன், தன் பெயரால் அருண்மொழித் தேவேச்சுரம் என்னும் சோமநாதராலயத்தை அமைத்தனன். இராசஇராசன் ஆண்ட அரசு இன்று இல்லை. அவன் வாழ்ந்த அரண்மனை இன்று இல்லை. ஆனால் அவனால் எடுக்கப்பட்ட சோமநாதர் ஆலயம் சிதைந்தாவது இன்று இருக்கிறது. இந்த அளவிலாவது இந்த நினைவுச் சின்னத்தைக் காத்துக்கொடுத்த, பழையாறை மக்கட்கும், அவ்வாலயத்தைக் கண்

காணித்து வந்த பெருமக்கட்கும் மிக்க நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உயிரோவியமாகத் திகழும் சிற்பங்கள் நிறைந்த இவ்வாலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் பல்லாண்டுகளாகவே இருந்து வந்தது. முயற்சிகளும் எடுக்கப்பெற்றன. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்பதற்குப் பொருந்த, திருப்பணிசெயற்படும்காலம் இப்போதுதான் வந்தது. இதுபோது இவ்வாலய தர்மகர்த்தாக்களாக விளங்குகின்ற பம்பப்படையூர் உயர்திரு G. சுந்தரராஜ வன்னியர் அவர்களும், பழையாறை உயர்திரு N. வீரையா இடங்காபிறத்தார் அவர்களும் அடுத்தடுத்து முயன்று சில பணிகளைச் செய்தார்கள். இந்நிலையில், இந்துமத அறநிலைய பாதுகாப்புத்துறை ஆணையர் உயர்திரு A. உத்தண்டராம பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் இவ்வாலயத்திற்கு வருகை புரிந்தபோது மனமிகஉருகி, திருப்பணியை உடன் தொடங்க செய்யவேண்டி இவ்வாலயத் திருப்பணிக்கென பதினையாயிரம் வெண்பொற் காசுகளை வழங்கியதோடு மட்டுமேயல்லாமல் 3—5—57 வெள்ளியன்று திருப்பணியையும் தொடங்கிக் கொடுத்தார்கள். இனி ஆலயம் அண்மையில் பொற் கோயிலாகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலயத்தைமட்டும் புதுக்கித் திருப்பணியை முடித்தாலும், ஆலய வரலாற்றையும் ஆலயச் சிறப்புக்களையும் யாவரும் அறியுமாறு செய்ய ஓர் தல புராணத்தையும் வெளியிடக் கருதினர்கள் இவ்வாலய தர்மகர்த்தாக்கள். இதற்கான செம்மை சான்ற பணியை ஆக்கிக் கொடுக்குமாறு, கும்பகோணம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில்

தமிழாசிரியராகத் தொண்டாற்றும், அடியேனது ஆருயி ரனைய அன்பர் வித்துவான், உயர்திரு. **சு. சுவர்ண காளீச்சுர பிள்ளை** அவர்களை வேண்டிக்கொண்டார் கள். அவர்களது அன்புருவாக பழையாறைத் தலபுராணம் வெளிவருகின்றது. உருவஅளவில் சிறு அளவாக இப்புத்த கம் இருப்பினும், சிறப்பியல்புகளில் மிகச் சிறந்து விளங்குகின்றது. சரித்திர வரலாற்றில் தொடங்கி, அது போது வாழ்ந்த மன்னர்களையும், அவர்களது அருஞ் செயல் களையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் இந் நூலாசிரியர். ஆலய அமைப்பு முறைகளையும் நன்கு விளக்கியிருக்கிறார்கள். திருவுருவங்களின் சிறப்புக்களை எல்லாம் மிகச் சிறந்த முறையில், உருவங்களைக் காணு தாரும், புரிந்து போற்றும் வகையில் காட்டியிருக்கிறார் கள். இத்தலத்தில் தோன்றிய அமர்நீதி நாயனார் சரித் திரத்தையும் சுருங்கக்கூறி விளங்கவைத்திருக்கிறார்கள். ஆலயத்திற்கான தேவாரப்பதிகங்களையும் மற்றைத்தனிப் பாடல்களையும் தெளிதின் உணருமாறு சேர்த்திருக்கிறார் கள். இத்தகு சிறப்பியல்புகள் ஆசிரியரது புலமையையும், திறனையும் நன்கு புலப்படுத்துகின்றன. இந்நூல் தமிழ் நாட்டு மக்கட்குப் பெரிதும் பயன்படுவதாக. இந் நூலாசிரியர் புலமையும் ஆற்றலும் சிறந்து ஓங்குவதாகுக

இப்படிக்கு,

*சு. சுந்தரேசஞ் செட்டியார்,*

தலைமையாசிரியர்,

நகராட்சி உயர்நிலைப்பள்ளி, குடந்தை.



கைலாயநாதர்

உ

செந்திலாதிபன் துணை

திருச்சிற்றம்பலம்

# பழையாறைத் தலவரலாறு

—*—

*சீரில் நீடிய செம்பியர் பொன்னினன் னாட்டுக்*
*காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில்சூழ்ந்து*
*தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து*
*பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை*

என்பது, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடும் கவிவலவராம் நமது தெய்வச் சேக்கிழார் பெருமானது அருமைத்திருவாக்கு. இத்துணைச் சிறப்பு வாய்ந்த பழையாறையானது, தென்னிந்திய இருப்புப்பாதையில், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தாராசுரம் புகைவண்டி நிலயத்திலிருந்து தெற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள சிற்றூராக விளங்குகிறது. இத்தலத்தைத் தரிசிக்கவருவோர் தாராசுரம் புகைவண்டி நிலயத்தில் இறங்கினல் பக்கத்தில் இரண்டாம் இராசஇராசனது புகழை விளக்கிக் கொண்டிருக்கும் இராச இராசேச்சுரத்தினது கோபுரத்தைக்கண்டுவணங்கி மகிழலாம். அங்கிருந்து தெற்கே ஒரு மைல் இரண்டு பர்லாங்கு தூரத்தில் முழையூர் என்னும் வைப்புத்தலமும், வடதளியாகிய வள்ளலார் கோவிலும் இருக்கின்றன. இங்குசிவப்பிரகாச சுவாமிகள்மடாலயமும் இருக்கிறது. அங்கிருந்து நேர் மேற்கே மூன்று பர்லாங்கு தூரத்தில் திருஞான சம்பந்தப்பெருமானுருக்கு முத்துப் பந்தர் வழங்கிய பட்டீச்சுரமும், திருச்சத்திமுற்றமும்

இருக்கின்றன. அங்கிருந்து தென்கிழக்கே ஒருமைல்வந்து திருமலைராயன் ஆற்றைக்கடந்தால் "செறிவிரைநன் மலர்ச்சோலை"ப் பழையாறைத் தலத்தை அடையலாம்.

இத்தலத்தில் சுமார் ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே. இவ்வூருக்குத் தெற்கே முதல் இராஜேந்திர சோழர் காலத்தில் வெட்டப் பெற்ற *முடிகொண்டசோழன்* ஆறும், வடக்கே *திரு மலைராயன்* ஆறும்ஓடி வளம்செய்கின்றன. கோவிலுக்கு எதிரே சோமதீர்த்தமாகிய திருக்குளமும், கோவிலுக்கு நேர் கிழக்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் "ஆரியா குட்டை" என்று வழங்கப்படுகிற இந்திர தீர்த்தமும், அதற்குப் பக்கத்தில் வயலின் நடுவே "குயவன் குட்டை" என வழங்கும் குளமும் இருக்கின்றன. இம்மூன்றும் மிகச் சீர்கேடடைந்தே விளங்குகின்றன. கோவிலுக்குத் தென்மேற்கு மூலையில் கிராமதேவதை யாகிய அய்யனார் கோவில் இருக்கிறது. இவ்வூர் மூவேந் தர்கள் காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதைக் காண் போம்.

## *சரித்திர வரலாறு*

இப்பழையாறையானது, இச்சிற்றூரையும் இதனைச் சூழ்ந்துள்ள முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், சோழன்மாளிகை, அரிச்சந்திரபுரம், ஆரியப்படையூர். பம்பைப்படையூர், புதுப்படையூர். மணப்படையூர், கோணப்பெருமாள்கோவில், திருமேற்றளி, நந்திபுரவிண் ணகரம் ஆகிய ஊர்களையும் தன்னகத்தே கொண்டு ஐந்து மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் உள்ள பெரிய நகரமாக இருந்தது.

கி. பி ஏழாம் நூற்றுண்டில் பழையாறை எனவும் கி.பி.எட்டாம் நூற்றுண்டில் நந்திபுரம் எனவும்.கி.பி.பதினென்றும் நூற்றுண்டில் முடிகொண்டசோழபுரம் எனவும் கி. பி. 12ம் நூற்றுண்டில் இராச இராசபுரம் எனவும் வழங்கப்பெற்றது.

இந்நகரில் அக்காலத்தில் சோழமன்னர்களின் அரண்மனை அமைந்திருந்த இடம், இக்காலத்தில் *சோழன் மாளிகை* என்னும் தனிஊராக உள்ளது. கி. பி. பத்து, பதினேராம் நூற்றுண்டுகளில் சோழ அரச குடும்பத்தினரில் *குந்தவைப் பிராட்டியார், செம்பியன் மாதேவியார்* போன்ற சிலர் இங்கு வாழ்ந்தனர் எனக் கல்வெட்டுகளால் அறிகிறேம்.

இவ்வரண்மனையைச் சுற்றிலும் முன்னிருந்த நான்கு படைவீடுகளும், *பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், ஆரியப்படையூர்* என்னும் சிற்றூர்களாக இப்பொழுது விளங்குகின்றன.

## *ஆலயங்கள்*

பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம். திருமேற்றளி, வடதளி, தென்தளி என்பன பழையாறையிலிருந்த சிவன் கோவில்களாகும். நந்திபுரவிண்ணகரம், கோபிநாதப் பெருமாள்கோவில் ஆகிய இரண்டும் பெருமாள் கோவில் களாகும். இக்கோவில்கள் இருந்த இடங்கள் தனித்தனிச் சிற்றூர்களாக இப்பொழுது விளங்குகின்றன. திருமேற்றளி என்பது திருமத்தடி எனவும், நந்திபுரவிண்ணகரம் என்பது நாதன்கோவில் எனவும். கோபிநாதப்பெருமாள்

கோவில் என்பது கோணப்பெருமாள் கோவில் எனவும் வழங்குகின்றன.

### *வாணிபம், பொருள்வளம்.*

இந்நகரம் மாடவீதி, தேர்வீதி முதலிய பல வீதிகளால் சிறந்து விளங்கின. இவ்வீதிகள் பன்னிரண்டு மாதங்களிலும் நடைபெறும் விழாக்களால் சிறப்புற்றன.

இங்கே வாணிபத்திற் சிறந்த வீதிகளாகத் திகழ்ந்த இடங்களே இப்பொழுது கும்பகோணத்தைச்சேர்ந்துள்ள ஒரு பகுதியாகிய இராஜேந்திரன் பேட்டையிலுள்ள, நெல்லுக்கடைத்தெரு, நாணயக்காரச்செட்டித்தெரு முதலிய இடங்கள் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். நாணயம் அடிக்கும் இடமாக இருந்த இடத்தில் இப்பொழுது கம்பட்ட விஸ்வநாதராலயம் விளங்குகிறது. (கம்பட்டம் = Mint நாணயச்சாலை) இதன் அடையாளங்களை இன்றும் அவ்வாலயத்தின் வடகீழ் மூலையில் காணலாம்.

## நகரை ஆண்ட அரசர்கள்.

### *பல்லவர்.*

இந்நகரை மூன்றும் நந்திவர்மன் கைப்பற்றி சோழர்களைத்தனக்குக்கீழ்ப்படுத்தினன். இச்செய்தி "*படையாறு சாயப் பழையாறு வென்றான்*" எனவரும் "நந்திக் கலம்பக" வெண்பாவடியினால் அறியக்கிடக்கிறது. இதனால் பல்லவர்காலத்தில் இந்நகரம் " நந்திபுரம் " எனப் பெயர் பெற்றது.

## விஜயாலயனுக்கு முற்பட்ட சோழர்கள்

*மணிமுடிச்சோழன்*

இவர், ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்து சமணரை வென்று சைவம் வளர்த்த தமிழரசியாகிய மங்கையற்கரசியாரது அருமைத்தந்தையார் ஆவார். இவர் இந்நகரையே தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். **மங்கையற்கரசியார்** பிறந்தருளிய நகர் இதுவேயாகும்.

திருப்பனந்தாளிலிருந்த சிவலிங்கப்பெருமான் சாய்ந்திருக்கக்கண்டு தன்சேனைகளோடு அங்குசென்று தன் புயவலிமையால் முயன்று நிமிர்க்க இயலாமல், குங்கிலியக் கலயர் தன் அன்பின் வலியால் நிமிரச்செய்தது கண்டு களித்த அரசர் மணிமுடிச்சோழரே ஆவார். பல்லவர்களுக்கு உட்பட்டு ஆண்டுவந்த சோழ மன்னர்கள் அனைவரும் இந்நகரையே தனக்குத் தலைநகராகக் கொண்டனர்.

## விஜயாலயனுக்குப்பிற்பட்ட சோழர்கள்

விஜயாலய சோழருக்குப்பின்வந்த அரசர்களுள் அரிஞ்சயனுக்கு வைதும்ப அரசன் மகள் கலியாணியிடம் பிறந்த மகனாகிய பராந்தகன் II (கி. பி. 957–970) இந்நகரிலே ஆட்சி புரிந்தனன். இச்செய்தி "மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்சோழர்" "பழையாறை நகர் சுந்தரச் சோழர்" எனவரும் பழம் பாடல்களின் அடிகளால் அறியக்கிடக்கிறது. இவன் அழகுடையவனாகத் திகழ்ந்தமையால் சுந்தரசோழன் எனப்பட்டான்.

சுந்தரசோழனின் தேவியர்கள், சேரன்மாதேவி, வானவன் மாதேவி என இருவராவார். சுந்தர சோழனின் அருமை மக்கள் *ஆதித்தகரிகாலன், அருண்மொழித்தேவன், குந்தவைப்பிராட்டி ஆகிய மூவராவர், அனைவரும் சிவநேயச் செல்வராகத் திகழ்ந்தமை அறிந்துஇன்புறத்தக்கது.

"சுந்தரசோழன் ஆளுகையில் "ஆ என்று ஓலமிட்டு அரற்றியவர் எவருமிலர்" என்றும் அதற்கு மாறுகச் சிவபெருமானை வணங்குங்கால் மக்கள் கூறிய "அர" என்ற ஒலிதான் கேட்கப்பெற்றது என்றும் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

## *முதல் இராசராசன்*

சுந்தரசோழரின் அருமைப்புதல்வராகிய அருண்மொழித்தேவர் என்னும் இராசராசன் தன் பெயரால் அருண்மொழித்தேவேச்சுரம் என்னும் சோமனுதராலயத்தை அமைத்தனன். இராச ராசனின் மனைவியாகிய பஞ்சவன்மாதேவியின் **பள்ளிப்படையாக எடுப்பிக்கப் பெற்ற "பள்ளிப்படைப் பஞ்சவன்மாதேவீச்சுரத்தை" இராச ராசன், திருமலைராயன் ஆற்றுக்கு வட கரையில் பட்டீச்சுரத்திற்கு அண்மையில் அமைத்தான்.

அவ்வமயம் பழையாறை அரண்மனையிலேயே குந்தவைப் பிராட்டியார், செம்பியன் மாதேவியார் ஆகியோர் தங்கி இருந்தனர்.

## *இராசேந்திரன் I*

இராசராசனுடைய அருமை மகனாகிய இராசேந்திர சோழன் பழையாறை அரண்மனையில் குந்தவை தேவியா

* இவனைத் தலைவராகக்கொண்ட "பொன்னியின் செல்வன்" என்னும் சரித்திரத்தொடர்கதையினை அமரர் கல்கி வரைந்து தமிழர்களுக்கு அளித்தனர்.

** பள்ளிப்படை = இறந்தவரின் நினைவாக எழுப்பும் கோவில்

ரால்வளர்க்கப்பட்டான். இங்கு பலநாள் தங்கிஇருந்தான். இவன் காலத்தில் சோழர்களது முடிசூட்டுவிழா நடைபெறும் தொன்னகரமாகியதும், அரசர் குடும்பத்தினர் பலர் வாழ்ந்த சிறப்புடையதுமாகிய இந்நகரம் முடிகொண்ட சோழபுரம் என வழங்கப்பெற்றது. இந்நகரின் தென்பால் ஒடும் ஆறு இவனல் வெட்டப்பெற்று "முடிகொண்ட சோழப் பேராறு" எனப் பெயர் பெற்றது.

### *விக்கிரம சோழன்*

இராசேந்திரனுக்குப் பின்வந்த விக்கிரமசோழனது தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரமானபோதிலும் பழையாறை முதலிய இடங்களிலிருந்த அரண்மனைகளில் தங்கித் தனது கட்டளைகளை நிறைவேற்றினன்.

### *இராசாதிராசன்*

விக்கிரம சோழனது மகள் வ்யிற்றுப் பேரனுகிய எதிரிலிப்பெருமாள் எனப்படும் இராசாதிராசனும், அவனது தம்பியும் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டு வளரலாயினர்.

## பாண்டியர்

### *மாறவர்மன் சுந்தரபாண்டியன் I*

மூன்றும் இராசராச சோழன் சுந்தர பாண்டியனுக்குத் திறை கொடுக்க மறுத்தனன். எனவே கி. பி. 1235ம் ஆண்டில் சோழனுடன் போர் புரிந்து சுந்தரபாண்டியன் வெற்றிபெற்ருன், தஞ்சையையும், உறையூரையும் நெருப்பிட்டான். முடிகொண்ட சோழபுரமாகிய இப் பழையாறையில் வீராபிடேகமும் விஜயாபிடேகமும் செய்துகொண்டான். அதற்குப்பின் இந்நகரம்தனது முக்கியத்துவத்தை இழந்தது.

இத்தகைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழையாறையில் சோழர்குலதிலகமாகிய இராசராசசோழனது திருப் பெயரைத் தாங்கும் அருண்மொழித் தேவேச்சுரம் என்னும் ஸ்ரீ சோமகலாநாயகி சமேத சோமநாதராலய அமைப்பினைக் காண்போம்.

## *திருக்கோவில் அமைப்பு*

கோவில் கிழக்கே நோக்கிய அமைப்புடையது. திருவீதிகள் உள்ளிட்டு மூன்று பிராகாரங்களை உடையது. கிழக்கு மேற்கில் நானூற்று நாற்பது அடிகளும், தெற்கு வடக்கில் இருநூற்று ஐம்பத்தைந்துஅடிகளும்உடையது. இராஜகோபுரத்தின் பீடம் எழுபத்தைந்து அடி அகலமுள்ளது. இக்கோபுரம் முற்றுப் பெருத நிலையில் இருக்கிறது. இவ்வாலயம் இராசராசசோழதேவரால் அமைக்கப் பெற்ற அருண்மொழித் தேவேச்சுரம் ஆகும். இராசகோபுரத்தினை அடுத்து இரண்டடுக்கு நிலையினை உடைய சிறிய கோபுரம் இருக்கிறது. சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனி சன்னதிகள் உள்ளன. முதற் பிராகாரச்சுற்றில் திருமாடப்பத்தி அமைந்திருந்தது. இப்பொழுது சிதைந்து காணப்படுகிறது. இப்பிராகாரத்தில் தக்ஷிணு மூர்த்தம், அர்த்த நாரீசுரர், பிரமதேவர் ஆகியோர் எழுந்தருளி இருக்கின்றனர். இப் பிராகாரத்தில் இருந்த விநாயகர், வள்ளி தேவசேனு சமேத ஸ்கந்தர் ஆகிய மூர்த்தங்களும், துர்க்கையின் திருவுருவமும் மகாமண்டப முன்மண்டபங்களில் எழுந்தருளச்செய்யப்பெற்றுள்ளன. முன்மண்டபத்தில் எழுந்தருளி அன்பர்களை மகிழ்விக்கும் கைலாய நாதர் திருவுருவைக்காண "நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று எண்ணும்படியாக இருக்கிறார்.



துர்க்கை

முதல் பிராகாரத்தில் வட கிழக்கு மூலையிலிருந்த சபாநாதர் மண்டபம் மிகச் சிதைந்து போயினமையால் நடராசர் மகா மண்டபத்திலேயே எழுந்தருளி இருக்கிறார். சுவாமி திருநாமம் சோமநாதர். அம்மையார் திருநாமம் சோமகலாம்பிகை எனப்படும்.

## தீர்த்தங்களும், தலவிருக்ஷமும்

கோவிலின் எதிரே சந்திரனால் உண்டாக்கப்பட்ட சோமதீர்த்தம் உள்ளது. இத்தீர்த்தத்தில் தைசங்கராந்தியில் மூழ்கினால் மிகச்சிறந்த பலனை அடையலாம். மற்றும், சடாயுதீர்த்தம், இந்திரதீர்த்தம், கமலதீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இத்தலத்தே சிறந்து விளங்குகின்றன.

இத்தலத்திற்குரிய விருட்சம் நெல்லி மரமாகும். இது இரண்டாவது கோபுரவாசலுக்குச் சமீபத்தில் விளங்குகிறது. இனி இவ்வாலயத்தில் விளங்கும் சிற்பச்சிறப்பினைக் காண்போம்.

## சிற்பச் செல்வங்கள்

சிற்பக்களஞ்சியம் எனத்தகும் இவ்வாலயத்திலுள்ள திருவடிவங்களில் சிலவற்றின் சிறப்பைக் காண்போம். இங்குள்ள ஒவ்வொரு வடிவமும் உயிரோவியமாகத் திகழ்கின்றன. அவற்றுள் ஒன்று துர்க்கையாகிய வைணவியின் பெருவடிவமாம்,

## துர்க்கை

அம்பிகை சங்கு சக்கரங்களுடனும், ஆறு திருக்கரங்களுடனும் நிற்கிறாள். சாந்தி வீசும் திருக்கண்களுடன், இளநகைவீசும் அதரங்களுடனும் காட்சியளிக்கிறாள். கத்தி கேடயங்களை இருகரங்கள் தாங்கியிருக்க, வலதுகரம்


அபயமளிக்கிறது. பாதத்தில் மிதிபடும் மகிடாசுரனின் கொம்புகள், நேரில் காணும் வழுவழுப்புடனும், வளைவுடனும் இருக்கின்றன. நுணுக்க வேலைப்பாடுகளுக்கு—மார்பிலுள்ள முத்தாரங்கள் சங்கு சக்கரங்களிலுள்ள வளைவுகள், கிரீடத்திலுள்ள மணிகள், இடையிலுள்ள ஆபரணங்கள் இவைகள் சிறந்த உதாரணங்களாகும்.

***கைலாய நாதர்***

கைலாசபதி வீற்றிருக்கும் மலையை நகர்த்தும் அடாத நோக்கத்துடன் இராவணன் அந்த மலையை முதுகில் ஏற்றிக்கொள்கிறான். அவனது பத்து மூளைகளும் இருபது தோள்களும் இந்த வேலைக்கு உபயோகப்படுகின்றன. மலை கிடுகிடென்று ஆடுகிறது, உமாதேவியார் இந்த எதிர்பாராத அசைவினால் பயந்தவளாக எம்பெருமானைத் தழுவிக்கொள்ள விரைகிறாள். தமது இடக்கையினால் கௌரியை அணைத்த சங்கரர் இந்தக் காரியத்துக்குக் காரணத்தை அறிந்து கால்கட்டை விரலினாலே இலேசாக அழுத்துகிறார்,

இராவணனுடைய விழிகள் பிதுங்குவதைச் சிற்பம் காட்டுகிறது, அவன் திணறும்போது மார்பு விம்மி இருப்பதையும் பார்க்கிறோம். அவனுடைய ஏமாற்றம் பத்து முகங்களிலும் பிரதிபலிக்கிறது. உமாபதி எவ்வளவு கம்பீரமாக உருவாகிவிட்டார்! பூணூலாகத் திகழும் நாகமும், மார்பில் திகழும் ஆபரணங்களும், ஜடாமுடியில் அமைந்த பிறையும், பாம்பும்கூட வந்துவிட்டன. அலட்சியமாக ஆலாலத்தை உண்ட நீலகண்டன்மீது கொண்டுள்ள பரிவு ஒன்றையே விளக்குகின்றது.

அம்பிகை அருட்கண்கள் பயத்தினால் விரிந்தும், முகமண்டலங்கள் அதற்கேற்றதொரு அழகுட



சோமநாதராலய முன்மண்டபம்

னும் உருப்பெற்றிருக்கின்றன. இறைவனது இருப்பிடமாகிய கயிலாயத்தில் புலியும் மானும் ஒரே துறையில் நீராடின என்பதற்கு அத்தாட்சி ஈசுவரன் காலடியில் சிற்பரூபமாக விளங்குகிறது. ஈசுவரியின் வலது புறத்தில் சர்ப்பமொன்று படத்தைத் தூக்குகிறது.

## ஸ்ரீ சோமனுதர் முன்மண்டப அமைப்பு

மண்டபமே இரதமாகி, அதற்குச் சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்தசக்கரமும் அமைக்கப்பெற்று, உடலெல்லாம் அலங்கரிக்கப்பெற்ற குதிரையும், யானையும் அதைப் பலம் கொண்டு இழுப்பதுபோலக் காணக்கிடக்கிறது.

யானையின் வளைந்த முதுகைக் கவனித்ததும் அது சிரமப்பட்டு இழுக்கிறதென்று அறிகிறோம். அந்தச்சிரமத்தை அதற்கு வருவிப்பவர்கள் இருவர் முதுகின்மேல் அமர்ந்து விரட்டுவது வெகு பொருத்தமாக அமைந்துவிட்டது என்பதை உடனே அறிந்து கொள்கிறோம்.

சக்கரம்தான் என்ன பூமியில் புதைந்து கிடந்தாலும் சிற்பவிசேடங்களில் கவர்ச்சிக் குன்றுமலே இருக்கிறது. பூமியில் சக்கரம் உருளும் இடங்களிலும் சிற்பவேலை நிறைந்திருப்பது உற்றுநோக்கத்தக்கது.

மண்டபத்தின் அடிவரிசை பூராவும் எண்ணற்ற சிறுசிறு நடனப் பெண்களின் சிற்பங்களைப் பார்க்கலாம். ஒன்றுபோல் ஒன்றில்லாமல், துளிபிசகாமல், உருவாகியுள்ள இந்த உருவங்கள், திறமையுடன் பொறுமையும் பெற்றவர்கள் தென்னுட்டுக்கலை மன்னர்கள் என்பதைச் சந்தேகமற விளக்குகின்றன.

## அர்த்தநாரீச்சுரர்

அர்த்த நாரீச்சுர உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில், கவர்ச்சியளிப்பது வளைவும், அதன் அழகும்தான். பின்னுல் இடபம் காட்சியளிக்கிறது.

யாளிகள், யானைகள் முதலிய சிற்பங்கள் இவ்வால யத்தில் மலிந்து காண்கின்றன. பக்கத்தில் இருக்கும் தூண்களில் எல்லாம் பூச் செடிகளும், தளிர்களும், பூக்களுமாகச் சிற்பவேலைகள் மண்டிக்கிடக்கின்றன.

## நரசிம்மமூர்த்தி

முன்கோபுரத்தைத் தாண்டியதும், அம்மன் சந்நிதி இருக்கிறது. அதன்முன் மண்டபத்தில் ஏறும் இருபுறங் களிலும் துவார பாலகர்கள் சிலை இருக்க நடுவே நரசிம்ம மூர்த்தியின் விளையாடல்களை விளக்கும் சிற்பங்கள் இருக் கின்றன. இரண்யகசிபு தனது மைந்தனை நோக்கி "உன் இறைவன் இந்தத் தூணிலும் இருக்கிருனு"? என்று ஏள னமாகக் கேட்பதும். பிரகலாதன், "இருக்கிருன்" என்று திடமாகப் பதில் சொல்லுவதுமாகிய கட்டத்தை பீடத் தின் வடகோடியில் நாம் காணலாம். அதற்கடுத்த சிற்பத் தில் தூணைப் பிளந்துகொண்டு உக்கிரமான வடிவத்தில் பல கைகளுடன் வெளிப்பட்டு, இரண்யனுடன் சண்டை போடுகிருர் மகாவிஷ்ணு. எதிரியின் காலைத் தம் காலுடன் பின்னிக்கொண்டிருப்பதையும், ஒரு கரத்தினுல் அவன் மகுடத்தைப் பற்றி பின்னுக்கு இழுப்பதையும் நேரில் காண்பதுபோலவே காண்கிருேம். வலது பக்கத்துமேல் கரம் எதிரியை ஒரு அறையாக அறைந்துவிடத் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சண்டையில் வெற்றியாருக்கு என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே சொல்லிவிடலாம்.



நரசிம்மாவதாரக் காட்சிகள்

அடுத்தபக்கத்திலே யுத்தமுடிவுக்குச் சிற்பம் செய்து விட்டார்கள். மிகவும் கோபாவேசமாகக் காட்சியளிக்கும் மூர்த்தி, இருகரங்களில் துஷ்டர்கள் இருவரை அசைய முடியாமல் அமுக்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு கரத்தினால் விசையுடன் வீசப்பட்ட ஒரு துஷ்டன் இடுப்பொடிந்து தலை கீழாக மண்ணைக்கவ்வ விரைந்துகொண்டிருக்கிறான், மகாவிஷ்ணு இரணியனை மடிமீது கிடத்திக் கொண்டு அவனது வயிற்றை மிகக் கோபாவேசமாகக் கிழிக்கிறார்.

பிரஹலாதனும் தாயும் ஒரு புறம் கைகூப்பி நின்று. அவரைச் சாந்தம் செய்கிறார்கள். இச்சிற்பத்தில் சிலபாகங்கள் சிதைந்திருப்பினும் கலைஞர்களுக்கு இச்சிற்பம் பெரு விருந்தளிக்கிறது.

இரு பக்கங்களிலும் மேற்புறத்தில் மனிதன் சிங்கத்தோடு சண்டைசெய்வது சிலாரூபமாகக் காட்டப்பெற்றிருக்கிறது. இம்மாதிரியான சிலைகள் பழையாற்றுக் கோவிலிலேயே இருபதுக்குமேல் காணப்படுகின்றன, அநேகம் பின்னமடைந்துவிட்டன என்றாலும் பெரிய கோபுரத்தின் அடிவாரத்திலுள்ளவை சில நல்லநிலைமையில் இருக்கின்றன. உயிர் ஒன்றே வேண்டும் என்ற நிலைமையில் ஏறிட்டுப்பார்க்கிறது சிலைச் சிங்கம்! மேலேஏறிவிட்ட வீரனைக் கீழே தள்ளத் தன்வாலைக்கொண்டு ஒரு சுருட்டுச்சுருட்டி இரு முன்னங்கால்களையும் உயரத் தூக்கி நிமிர்ந்தும் நிற்கிறது. கீழேநிற்கும் ஆள் எந்த சமயமும் தனக்கு அபாயம் நேரிடலாம் என்பதை உணர்ந்தவனாக ஓட்டம் பிடிக்கவும் தயாராகத்தான் இருக்கிறான்.

சிங்கத்தின் தலையில் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களும், பிடரியும், கால்களும், கூர்மை மங்காத கால் நகங்

களும்கூட மிகவும் வேலைப்பாடமைந்துள்ளன. சிற்பக் கலையில் சிம்மம்போன்றவர்களாலேயே இத்தகைய கலைக் கோயிலை ஆக்கமுடியும், இனி இத்தகைய சிறப்புடன் அமைந்த இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சோம கலாநாயகி சமேத சோமனாதரது சிறப்பினையும் தலவிசே டம், தீர்த்த விசேடம் முதலியவற்றையும் காண்போம்.

——

# பிரமகைவர்த்த புராணம்

## *க்ஷேத்திரகாண்டத்தில் காணப்பெறும் வரலாறுகள்*

### *தலப் பெருமை*

இந்தத் தலமானது கிருதயுகத்தில் வேப்பவனமென வும், திரேதாயுகத்தில் வாழைவனமெனவும், துவாபர யுகத்தில் அடம்பவனமெனவும், இந்தக்கலியுகத்தில் நெல்லிவனமெனவும் வழங்கப்படுகிறது. கிருதயுகத்தில் பிராமணர்களும், திரேதாயுகத்தில் கருடனும், கங்காதேவி யும், துவாபரயுகத்தில் துஷ்டகேதுவும் கலியுகத்தில் ஆதி சேடனும் பூசித்த தலம்.

### *சோமனாதர் தோன்றியமை*

முன்னொருகாலத்தில் கருடன். தன்தாயினுடைய அடிமைத்தனம் நீங்குவதற்காகத் தேவேந்திரன்பாற் சென்று, அமிர்தகடத்தை எடுத்துக் காவிரியின் தென்பால் வருகையில் சில அசுரர்களுக்கும் கருடனுக்கும் அந்த அமிர்தகட விஷயமாய்ச் சண்டை உண்டானதில், அந்தக்

கடத்திலிருந்து மூன்று துளிகள் கீழே விழுந்தன. அவை கள் விழுந்த இடம் நெல்லி வனமாக இருந்தது. அவற்றுள் ஒரு துளி சிவலிங்கமும், மற்ருென்று அம்பிகையும், பிறிதொன்று புண்ணிய தீர்த்தமும் ஆயின, போர் முடிந்த பிறகு கருடன் அப்புனித தீர்த்தத்தில் நீராடி, சிவனையும் சத்தியையும் வழிபட்டு, சிவசாயுச்சியமடைந்தான். கருடன் தன் பெயரால் சடாயுதீர்த்தம் என ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினுன். இத்தீர்த்தத்தில் நியமமுடன் மூழ்குவோர் குட்டரோகம் முதலிய தீராநோய்களினின்றும் நீங்கி மீண்டும் சிறந்த அழகிய தேகத்தைப் பெறுவர்.

## சந்திரன் பூசித்துப் பேறுபெற்றமை

சந்திரன் தக்கனது பெண்கள் இருபத்தெழுவரை மணந்து, அவர்களிடத்து ஒருமித்து ஆசைவைக்காது, கார்த்திகை, உரோகிணி இவர்களிடம் அன்புவைத்தான். மற்றைப்பெண்கள் தந்தையிடம் குறைகூறத் தக்கன் நாள்தோறும் ஒவ்வொரு கலை தேயவும், க்ஷயரோகம் அடையவும் சாபம் தந்தனன். சந்திரன் இத்தலத்தை வந்தடைந்து தன் பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி இறைவனை வழிபட்டு தமது கலைகள் வளரவும், நோய்நீங்கவும் அனுக்கிரகம் பெற்ருன், அவனது வேண்டுகோளுக்கு இணங்க இறைவன் சோமகலாநாதரெனவும் இறைவி சோமகலாநாயகி எனவும் பெயர் பெற்றனர். சந்திரனுலுண்டாக்கப்பட்ட சோமதீர்த்தத்தில் முற்காலத்தில் திருஷ்டகேது என்பவர் பிரதோஷம், சிவராத்திரி, கார்த்திகைச் சோமவாரம், பங்குனி மாதத்து அமாவாசை ஆகிய விசேட நாட்களில் முழுகித் தம்மை வருத்திய பெருநோயிலிருந்து நிவர்த்தியடைந்தார்.

## பஞ்சகுரோசத்தலங்கள்

மேலும் இத்தலம், திருநல்லூர், திருவலஞ்சுழி, திருச்சத்திமுத்தம், பட்டீச்சுரம், திருவாலூர் என்ற சிவதலங்களால் சூழப்பெற்றதாகும்,

### 1 திருநல்லூர்

வாசுதேவர், கிருஷ்ணன், பாண்டவர்கள் ஆகியோர் பூசித்த தலம். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய தலம், அமர்நீதி நாயனர் முத்திபெற்ற தலம்.

| சுவாமி பெயர்: | அம்மையின் பெயர்: |
|---|---|
| பெரியபாண்டவேச்சுரர் | திரிபுரசுந்தரியம்மை |

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரது தேவாரப் பதிகங்களையுடையது.

### 2 திருவலஞ்சுழி

இந்திரன் பொருட்டு வந்த காவிரி ஈண்டுச் சுழியில் ஆழ இந்திரன் வேண்டுகோளால் "வரகண்ட முனிவர்" அச்சுழியில் புக அது பாதாளம் செல்லாது மீண்டும் ஓடியது. இத்தலத்தில் இந்திரனல் பூசிக்கப்பட்ட கணபதி அவன் மீண்டும் எடுக்க வராமல் அழுந்தி இருக்கிறர்.

| சுவாமி பெயர்: | அம்பிகையின் பெயர்; |
|---|---|
| சித்தீசர் | நித்தியநாயகி |

தீர்த்தம் காவிரி, நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய இருவரும் பாடியுள்ளனர்.

### 3 திருச்சத்திமுத்தம்

உமாதேவியார் பூசித்துப் பேறுபெற்றதலம்.

| சுவாமி பெயர்: | அம்பிகையின் பெயர்: |
|---|---|
| சிவக்கொழுந்தீசர் | பெரியநாயகி |

தீர்த்தம் சத்தி தீர்த்தம். திருநாவுக்கரசரது பதிகம் இருக்கிறது.

## 4 திருப்பட்டீச்சுரம்

இவ்வூராலயத்தில் எழுந்தருளிய இறைவர் பசுக்கூட்டங்களை காத்தபெருமானுவார். திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு முத்துப்பந்தர் அருளிய தலம்.

சுவாமி பெயர்: பட்டீச்சுரர்

அம்பிகையின் பெயர்: பால்வளைநாயகி

தீர்த்தம்: சிவகங்கை, திருஞானசம்பந்தரது திருப்பாடலை யுடையது.

## 5 திரு ஆவூர் (பசுபதீச்சுரம்)

இந்திரன், சப்தரிஷிகள், பசுக்கள் பூசித்ததலம்.

சுவாமி பெயர்: பசுபதீச்சுரர்

அம்பிகையின் பெயர்: மங்களநாயகி

தீர்த்தம்:- பசுதீர்த்தம், திருஞானசம்பந்தர் திருப்பாடலை யுடையது.

இத்தகைய பஞ்சகுரோசத் தலங்களையும் வழிபட்டு இந்திரன் இத்தலத்தையடைந்து, தீர்த்தமொன்றமைத்து அதில் நீராடி, தன் இந்திரபதவி நிலைக்கப்பெற்றான். பின்பு இந்திரன், சோமநாதருக்கு ஆலயம் அமைத்து விழா நிகழ்த்தி மகிழ்ந்தான். ஆகையால் இத்தலத்தைத் தரிசிக்க வருவோர் இதனைச் சூழ்ந்துள்ள பஞ்சகுரோசத் தலங்களி லும் சென்று வழிபட்டு இத்தலத்தையடைந்து இந்திர தீர்த்தத்தில் மூழ்கி சோமகலாநாதரை வழிபட இப்பிறப் பில் சகலவித இன்பங்களையும் அனுபவித்து மறுபிறப்பில் பேரானந்தப் பெருவாழ்வை அடைவர்என்பது திண்ணம். தக்ஷிணாயன புண்ணியகாலத்தில் பஞ்சகுரோசயாத்திரை செய்து இந்திர தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடல் சிறப்புடையதாகும்.

மேலும் காமதேனுவின் புத்திரிகளுள் ஒருவராகிய விமலி, பாரியின் புத்திரி இருவர், இலக்குமி முதலியோர் இத்தலத்தை வழிபட்டுப் பேறுபெற்றனர்.

# பெரிய புராணம் கூறும் வரலாறு

## அமர்நீதிநாயனர் (கி. பி. 400—600.)

இப்பழையாறைப் பதியிலே வணிகர் குலத்திலே அமர்நீதி நாயனர் திருவவதாரம் செய்தருளினர். அவர் எங்கிலத்தும் வருகின்ற பொன், மணி, துகில் முதலிய வற்றிலே வாணிகஞ் செய்து அதனல் வளமிக்கு வாழ்ந்த னர், அவர் சிவன் கழல் அல்லது வேறென்றும் சிந்தை செய்யாதவர். சிவனடியார்களுக்கு அமுது செய்வித்து அவரவர்கருத்தினைத்தாமே அறிந்து வேண்டுமாறு கந்தை, கீழ், உடை, கோவணம் என்பவற்றை உதவி வந்தனர். (இப்பெரியார் வாழ்ந்த இடமென்று கோவிலிலிருந்து திரு மலைராயன் ஆற்றுக்குச் செல்லும் வழியில் முதலிலுள்ள ஒருவெற்றிடத்தைக் காண்பிக்கின்றனர்.)

"திருநல்லூர்" என்னும் திருப்பதியிலே நடைபெறும் திருவிழாவைக்கண்டு இன்புற அடியவர் பலர் அங்கே போவது வழக்கம். அவ்விடத்தில் அடியவர்களுக்குத் திரு வமுது செய்விக்கும் பொருட்டு நாயனர் ஒரு திருமடம் கட்டினர். நாயனர் சுற்றத்தவர்களுடன் அத்திருமடத்தில் தங்கி தமது தொண்டுகளைக் குறைவற ஆற்றிவந்தார்,

அமர்நீதியாருக்குத் திருவருள் சுரக்க வேண்டி சிவ பெருமான் ஒருநாள் வேதியராய் பிரமச்சாரி வடிவந்தாங்கி இரண்டு கோவணமும், திருநீற்றுப்பையும் தருப்பையும்

கட்டப்பெற்ற ஒரு தண்டேந்தித் திருமடம் நோக்கிவந் தார். வந்ததும் அமர்நீதி நாயனுர் அவரை முறைப்படி வழிபட்டனர். வேதியர் பெருமான் நாயனுரை நோக்கி ''உமது திருத்தொண்டைக் கேள்வியுற்று உம்மைக் காண வந்தோம்'' என்ருர். அதுகேட்ட நாயனுர் ''இங்கே அந்த ணர்களால் செய்யப்பெற்ற அமுதும் உண்டு'' என்று வணங்கினுர். பிரமசாரியார் ''காவிரியில் நீராடி வருவோம், ஒரு வேளை மழைவரினும் வரும். இவ்வுலர்ந்த கோவணத் தை வைத்திருந்து கொடும்'' என்று தண்டிலுள்ள ஒரு கோவணத்தை அவிழ்த்து'' இதன் பெருமையை உமக்குச் சொல்ல வேண்டுவதில்லை, இதனை இகழாமல் வைத்துக் கொடும்'' என்று அதனைநாயனுரிடம் அளித்துச் சென்ருர். அடியவர் பெருமான் அக்கோவணத்தை ஒரு தனியிடத் தில் சேமித்து வைத்தார்.

திருவருளால் அக்கோவணம் மறையலாயிற்று. வேதி யர் நீராடி மழையில் நனைந்து வந்தனர். மடத்தில் திரு வமுது சித்தமாக இருந்தது. அந்தணர்பெருமான் அன்ப ரைப்பார்த்து ''ஈரத்தை மாற்றவேண்டும். தண்டிலுள்ள கோவணமும் ஈரமாயிருக்கிறது. ஆதலால் உம்மிடம் அளித்தகோவணத்தைகொண்டுவாரும்'' என்ருர். நாயனுர் கோவணத்தை கொண்டுவரச் சென்ருர். சென்ற நாயனுர் கோவணத்தைக் காணுமல் திகைக்கிருர். அங்கு மிங்கும் ஓடுகிருர். அலைகிருர், இடர்வந்ததே என்று கலங்குகிருர். இனி நிற்கமாட்டாதவராய் வேருெரு கோவணத்தைக் கொண்டுவந்து ''அடிகள் அளித்த கோவ்ணம்கெட்டுவிட் டது. அதனைத் தேடித்தேடிப் பார்த்தேன். அதை எங்கும் கண்டேனில்லை. வேறு இக்கோவணம் கொண்டுவந்திருக் கிறேன். இஃது ஒன்றினின்றும் கிழிக்கப்பட்டதன்று. புதி

தாக செய்யப்பட்டது. இதனை ஏற்றருளும். பிழைபொறுத் தருளும்'' என்றிறைஞ்சினர்.

மறையவர் கோபித்து ''இன்று கொடுத்த கோவணம் எப்படிக் கெட்டுவிடும். அதனை எடுத்துக்கொண்டு வேறொரு கோவணமும் கொடுக்கத் துணிந்தீர்! அடியார்களுக்கு நல்ல கோவணம் கொடுப்பதாகச் சொல்வதெல்லாம், என் கோவணத்தைத் திருடத்தான் போலும். உமது வாணிபம் நன்று'' என்று கூறினர். அடிகள் நடுநடுங்கி ஐயரைப் பார்த்துப் ''பிழையைத் தெரிந்துசெய்தேனில்லை. இக்கோவணமன்றி நல்ல மணிகளையும்பட்டாடைகளையும் கொடுக்கிறேன். ஏற்றருளல் வேண்டும்'' என்றுவேண்டினர். அடிகள் தணிவுற்று ''எமக்கு ஒன்றும் வேண்டாம். எனது கோவணத்துக்கு ஒத்த நிறையுள்ள கோவணம் கொடுத்தால் போதும்'' என்றார். அதற்கு நாயனர் ''எதன் நிறைக்கு ஒத்திருத்தல் வேண்டும்'' என்று கேட்டார். அந்தணர் 'இக்கோவண நிறைக்கு' என்று தண்டில் கட்டியுள்ள கோவணத்தை எடுத்துக் காட்டினர். அடியவர் விரைந்து துலை நாட்டினர். அந்தணர் தமது கோவணத்தை ஒருதட்டிலிட்டார். நாயனரும் தாம் கொண்டுவந்த கோவணத்தை மற்றொரு தட்டிலிட்டார், தட்டு நேர் நிற்கவில்லை, அக்காட்சி கண்ட நாயனர் அந்தணரின் ஆணைபெற்று தம்பாலுள்ள கோவணங்களையும், பட்டாடைகளையும், மணிகளையும், பொருட்குவியல்களையும் முறையே கொண்டுவந்து தட்டில் இட்டார். தட்டு நேர் நிற்க வில்லை. அக்காட்சிகண்டு நாயனர் ''அடிகளே! என்னிடத்துள்ள எல்லாவற்றையும் கொண்டு வைத்து விட்டேன். யானும், மனைவியும், புதல்வனும் எஞ்சிநிற்கிறோம். திருவுளமிருப்பின் நாங்களும் தட்டிலேறுகிறோம்'' என்றார். ஐயரும் அதற்குஇசைந்தார்.

அமர்நீதி நாயனர் பெரிதும் மகிழ்ந்து, மனைவியுடனும் மைந்தருடனும் துலையை வலம் வந்து "இதுகாறும் நாங்கள் நிகழ்த்திவந்ததொண்டு தவறுதல் இல்லாததாயின் நாங்கள் ஏறினதும் இத்துலை நேர் நிற்பதாக" என்று மொழிந்து ஐந்தெழுத்தை ஓதித் தட்டிலேறினர். ஏறினதும் தட்டு நேர் நின்றன. அதனைக்கண்ட மன்னவர் வாழ்த்தினர், விண்ணவர் பூமாரி சொரிந்தனர். பிரமச்சாரியாக வந்த பெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றினர். தட்டிலே நின்ற நாயனரும் அவர்தம் மனைவியாரும் புதல்வரும் ஆண்டவன் திருக்கோலத்தைக் கண்டு போற்றினர்கள். சிவபெருமான் மூவருக்கும், தம்மை என்றும் தொழுது கொண்டிருக்கும் வான்பதம் அருளி எழுந்தருளினர்.

திருவருளால் அத்துலையே விமானமாகி மேலே சென்றது. அமர்நீதி நாயனர் மனைவியுடனும் மைந்தருடனும் சிவலோகம் சேர்ந்தனர். (இக்காட்சி சிற்பவடிவில் வடதளி ஆலயத்தில் அமைந்துள்ளது)

## திருநாவுக்கரசர்.

"செய்ய சடையார் பழையாறை! செறி விரை நன் மலர்ச் சோலைப் பழையாறை" எனச் சேக்கிழார் பெருமானல் போற்றப்பெறும் இத்தலத்தை திருநாவுக்கரசு சுவாமிகள் இரண்டுமுறை வந்து தரிசித்தார்.

மீண்டும் மூன்றும் தடவையாக பழையாறைக்கு வந்தார். வடதளி சிவாலயத்தில் சிவலிங்கப்பெருமான் சமணர்களால் மூடப்பட்டிருந்தார். அப்பர்பெருமான் ஆண்டவனைத் தொழுதபொழுது அது சமணர்கள் விமானம் என்றறிந்து மனம் நொந்து ஓரிடத்தில் ஒதுங்கி,

சிவபெருமான் திருவடியைச்சிந்தித்து, ''ஐயனே! சமணர்கள் வஞ்சம் ஒழிதல் வேண்டும். அவர்கள் திறம் அழிதல் வேண்டும். இறைவனது திருவுருவைக்கண்டு தொழாது யான் பேர்சேன், உண்ணேன்'' என்று உறுதிகொண்டு உண்ணாவிரதமிருந்தனர்.

அடியவருக்கெளிய அம்பலவாணர், மன்னன் கனவில் தோன்றி நிலைமையைக்கூறி சமணர்களின் வஞ்சகத் தன்மையை அழிக்குமாறு கூறி தாம்எழுந்தருளிஇருக்கின்ற இடத்தின் அடையாளத்தையும் குறிப்பிட்டார்.

மன்னன் எழுந்து அமைச்சர்களையும் உடனழைத்துச் சென்று திருநாவுக்கரசுப் பெருந்தகையாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி சமணர்களின் வஞ்சகத்தை அழித்து சிவலிங்கப் பெருமானது மறைப்பைநீக்கி, விமானங்கள் அமைத்துத் திருப்பணி செய்தான். திருநாவுக்கரசர் பெருமான் சிவலிங்கப்பெருமானைக்கண்டு தொழுது பேரானந்தப்பெருங்கடலில்மூழ்கினர். இவ்வருட்டிறத்தை ''தலையெலாம்பறிக்கும்'' எனத்தொடங்கும்திருப்பாடலால் அருளிச்செய்தார். அப்பர்பெருமான் சிலநாள் இங்கு தங்கி உழவாரப்பணிபுரிந்து மகிழ்ந்தார்.

திருஞானசம்பந்தப்பெருமான் பழையாறைமேற்றளி வடதளியாகிய தலங்களைக் கண்டு மகிழ்ந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மேற்றளியைக் கண்டுவழிபட்டனர்.

## கல்வெட்டு

சோமனாதராலயத்தின் முன்னுள்ள மண்டபத்தில் உள்ள தூண்கள் சிலவற்றில் பின்வரும் கல்வெட்டு காணப்படுகிறது.

"சகாப்தம் 1375-ன் மேற் செல்லாகின்ற ஸ்ரீ முகவருஷ சித்திரைமீ° சோமநாதேசுவர(ர்) கோயிலில் பெரிய மண்டபமும் சோபானமும் பொருவனூருடையான் வாணாதராய நாயன் நாரசிங்கதேவர் திருப்பணி"

இச்சாசனம் அக்கோயிலில் பெரிய மண்டபம் ஒன்றும். சோபானமும் பொருவனூருடையான், வாணாதராயன், நரசிங்கதேவர் என்பவர் திருப்பணிசெய்த விவரத்தைக் கூறுவது. சகாப்தம் 1375ல் இச்சாசனம் எழுதப்பட்டது. இதன்பின்னர் மேற்கண்ட கல்வெட்டின் சொற்றொடரே மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

பட்டீச்சுரத்திற்கு அண்மையில் திருமலைராயன் ஆற்று வடகரையில் உள்ள பள்ளிப்படைப் பஞ்சவன்மாதீச்சுரம், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், நாதன்கோவில் முதலிய இடங்களில் உள்ள பல கல்வெட்டுக்கள் இவ்வூரைப்பற்றிய பல செய்திகளைக் கூறுகின்றன. பட்டீச்சுரக்கல்வெட்டு இவ்வூரைச் "சோமனாதபுரம்" எனப் பேரிட்டுக் கூறுகிறது. தஞ்சாவூரிலுள்ள கல்வெட்டுகள் இவ்வூரை "ஆயிரத்தளி" எனப் பேரிட்டு அழைக்கின்றன.

## இலக்கியங்கள்

### *தலபுராணம்*

இவ்வூருக்கு பட்டீச்சுரம், திருமேற்றளி, திருவலஞ்சுழி முதலிய இடங்களுக்குத் தல புராணம் செய்த ஸ்ரீ சிதம்பரரேவண சித்தர் என்பவராலோ அல்லது அவர் காலத்தவராலோ இயற்றப்பட்ட தல புராணம் இருந்திருத்தல் வேண்டும். அதுபற்றிய விவரம் ஒன்றும் இப்பொழுது

கிடைக்கவில்லை. வடமொழியில் "ஆமலகவனமகாத்மியம்" என்னும் நூல் உள்ளது. அந்நூலானது இத்தலத்தைப்பற்றிப் பிரமகைவர்த்த புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் கூறப்படும் வரலாறுகளைத் தெரிவிக்கிறது. அறுபது பக்கங்கள் கொண்ட கையெழுத்துப் பிரதியாக இருக்கிறது.

*திருமுறைகள்.*

திருஞானசம்பந்தப்பெருமானுர் இரண்டாந் திருமுறை, திருக்ஷேத்திரக்கோவையில் "ஆறை" என்று இத்தலத்தைக் குறிப்பிடுகிருர். இப்பாடலில் இரண்டடி மறைந்து இப்பொழுது கிடைக்கவில்லை. மூன்ருந் திருமுறை பட்டீச்சுரத்திருப்பதிகத்தில் பழையாறையின் வளத்தை மிக அழகுபடப் புகழ்கின்ருர். இத்தலத்திலிருந்த அன்பர்களது ஆன்மஞானச் சிறப்பினையும், அச்சிறப்பால் அவர்கள் யாகம் முதலியவற்றை முறைப்படிச் செய்து அதனுல்மழைவளஞ் சிறந்தமையையும் அவ்வளத்தால் செழிப்புற்று சோலைகள் அழகுபட ஆகாயத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்து பரந்து விளங்கியமையையும்

"எரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டு
பொழில்சூழ் பழசை"

என்னும் அடியால் நமக்கு ஞானசம்பந்தப் பெருமான் விளக்குகிருர். மேலும், இந்நகரத்தில் வாழ்ந்த மங்கையர்கள் அதிகாலையில் எழுந்து நீராடிக் களித்து ஆரவாரஞ் செய்கின்ற ஒலியும், அவர்களது மாலைகளின் மணமும் எங்கும் நிறைந்துள்ள பழையாறை எனவும், மீன்கள் துள்ளிவிளையாடும் வயல் வளஞ்செறிந்த பழையாறை எனவும், மழவீர்படை நிறைந்த பாடிசூழ்ந்து மாடங்கள் நிறைந்த பழையாறை எனவும் புகழ்கின்ருர். இப்பதிகத்

தால் பட்டீச்சுரம் பழையாறையைச் சேர்ந்த ஒரு பகுதி என்பதை அறியலாம்.

இனித் திருநாவுக்கரசர் இத்தலத்தில் பாடிய குறுந் தொகைப்பதிகம் ஐந்தாம் திருமுறையில் இருக்கிறது. ஆறாந்திருமுறையிலும் அப்பர்பெருமான் தனது தாண்டகத்தில் நான்கு இடங்களில் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். ஏழாந்திருமுறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்பழையாறை மேற்றளியை இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார்.

பதினோராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகள் இவ்வூரில் வாழ்ந்த அமர்நீதிநாயனாரைச் சிறப்பிக்கின்றார்.

பன்னிரண்டாந்திருமுறையாகிய பெரிய புராணத்தில் சேக்கிழார்பெருமான்; அமர்நீதி நாயனார் புராணம், திருநாவுக்கரசர் புராணம், திருஞானசம்பந்தர் புராணம், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம், ஆகியவற்றில் இத்தலத்தைப் பற்றிய செய்திகளைக் கூறியருளுகின்றார்,

"விண்பொருநீள்மதிளாறை மேற்றளி" எனவரும் அடியால் பழையாறை மேற்றளிக் கோவிலைச்சுற்றி நீண்ட மதில்கள் இருந்தன என்பதை அறியலாம். (இப்பொழுது மதில்கள் இடிந்து மேடாகக் காட்சியளிக்கின்றன)

தேரோடு வீதிகள் பலசிறந்து மிகவும் பழமையாகிய பெருமைசேர்பதி பழையாறை என்று அமர்நீதி நாயனார் புராணத்தில் புகழப்படுகிறது.

ஸ்ரீ அருணகிரி நாதர் திருப்புகழும் இத்தலத்திற்கு உள்ளது. அப்பாடலில்,

"ஆடப்பொற்கோபுரமேவிய
ஆடிக்கொப்பாமதிள்சூழ்பழை
யாறைப் பொற்கோயில்"

எனப் புகழப்படும் ஆலயம் இப்பொழுதிருக்கும் நிலையைச் சிந்தித்தால் எத்தகையோர் மனமும் திகைப்புறும் என்பதில் ஐயமில்லை.

7

112761
Q23;38.21193
N57

## பிரபந்தங்கள்

உமாபதி சிவாச்சாரியார் செய்தருளிய சிவக்ஷேத்திரக் கலிவெண்பாவிலும், அகோரமாதவர் செய்தருளிய காளை நாயகர் புராணத்திலும். வடலூர் இராமலிங்க அடிகள் செய்தருளிய விண்ணப்பக் கலிவெண்பாவிலும் ஹரித் துவாரமங்கலம் சோமசுந்தர தேசிகர் செய்தருளிய சிவாலய மான்மியக் கோவையிலும் இத்தலம் புகழப்படுகின்றது.

## பழம்பாடல்கள்

வீரசோழிய உரையில்வரும் இரண்டு பாடல்களும், பெருந்தொகையில் வரும் பாடல்கள் இரண்டும், யாப்பருங் கலவிருத்தியுரையில் காணப்படும் பாடல்களும் இத்தலத்தைப்பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. அவற்றின் ஆசிரியர்கள் யாரென்று புலப்படவில்லை. நந்திக் கலம்பகத்திலும் இங்கு நிகழ்ந்த போர்ச் செய்தி கூறப்படுகிறது.

இத்தகைய புகழமைந்த பழையாறையில் விளங்கும் இவ்வாலயத்தின்பொருள் வருவாய் நிலையைச்சிந்திப்போம்.

## வரவு செலவு

இத்தகைய புராணப் பெருமையும், சரித்திரப் பெருமையும் வாய்ந்த, அருண்மொழித் தேவேச்சுரமென, இராசஇராசனது அருமைத் திருப்பெயரைத் தாங்கிய ஸ்ரீ சோமகலாம்பிகா சமேத சோமநாதராலயத்தின் நிலையைக் காண்போர் கருங்கல்மனமுடையோராயினும் கண்ணீர் விடுவரென்பது திண்ணம். மேலும் இப்பொழுதுள்ள இவ்வாலயத்தின் வருமானத்தை அறிந்தால் வியப்பும் திகைப்பும் கொள்வர். இவ்வாலயத்துக்குச் சொந்தமானநிலம் 9ஏக்கர், 12 சென்டுதான், அதிலும் நஞ்சை மூன்று ஏக்கர்தான்.

பாக்கியுள்ள 6 ஏக்கர் 3 சென்டு வெறும் இலுப்பை மரம் நிறைந்த புஞ்சை. இவைகளின் ஆண்டு வருமானம் சுமார் 500 ரூபாய்க்குக் குறைவாகவே உள்ளன. பல அன்பர்களின் துணைகொண்டு திருவாதிரை விழா நடைபெற்று வந்தது நாகமுத்து இடங்காப்பிறந்தார், தியாகராச இடங்காப்பிறந்தார் வகையரு முறையே மகர சங்கராந்தி வீதியுலாவும், பங்குனி அமாவாசையுலாவும் நடத்திவந்தார்கள், காலப்போக்கில் அவ்விழாக்களும் இப்பொழுது நடைபெறுது நின்றன.

## இப்பொழுது நிகழும் விசேடங்கள்.

ஆனித்திருமஞ்சனம், மூப்பக்கோயில் சீனிவாச இடங்காப்பிறந்தாரால் நடத்தப்பெறுகிறது. சிவராத்திரி விழா முதற் காலம் கும்பகோணம் உயர்சைவத்திரு அ. சு. கனகசபை செட்டியாரவர்களாலும், இரண்டாங் காலம் உயர்திரு சாமி இடங்காப்பிறந்தார் வகையருவினுலும், மூன்றுங்காலம் தேவக்கோட்டை, திருப்பணிச் செல்வர் அருணசலஞ் செட்டியாரவர்களாலும் நாலாங்காலம் சிவப்பிரகாச இடங்காப் பிறந்தார் வகையருவினுலும் நடத்தப்பெற்றுவருகின்றது. மற்றும் ஆண்டு தோறும் சந்தனக் காப்பு விழா பல அன்பர்களின் உதவியைக் கொண்டு நடத்தப்பெற்று வருகிறது.

## நிர்வாகம்

இவ்வாலயத்திற்கு 19-2-1953ல் இந்துமத பரிபாலன போர்டார், பம்பைப்படையூர் உயர்திரு G. சுந்தரராச வன்னியர் அவர்களை மானேஜிங் டிரஸ்டியாகவும், பழையாறை உயர்திரு N. வீரையா இடங்காப்பிறந்தார், அவர்களை டிரஸ்டியாகவும் நியமித்தனர். இவ்விருவரும் இப்பணியேற்றுக்கொண்டதுமுதல் இவ்வாலயம் பலவகை

யிலும் சிறப்புற்றன. சிலபணிகளை இங்கு குறிப்பிடுவோம். பணி ஏற்று ஒரு மாதத்திற்கெல்லாம் கருப்பக்கிரக கோபுர ஸ்தூபியை செப்பனிட்டு 21-3-53ல் அபிடேகம் செய் வித்தனர். 1-4-56ல் இவ்வாலயத்திற்கு மின் விளக் குகள் அமைத்தனர். இவர்கள் பணி ஏற்றுக்கொண்டது முதல் சந்தனக்காப்பு விழாவில் சுவாமி வீதிக்கு எழுந்தரு ளுகிறார். இராப்பகல் இறைவன் தொண்டிலேயே அவர் கள் மனம் ஈடுபட்டிருப்பது பாராட்டற்பாலது.

இவ்வாலயத் திருப்பணிக்காக அறநிலையப்பாதுகாப்புத் தலைவர் சிவநேயச் செல்வர் திரு. A. உத்தண்டராமபிள்ளை அவர்கள் தமது இலாகாவிலிருந்து ரூ. 15,000 நன்கொடை வழங்கியுள்ளார்கள். திருப்பணிக்கமிட்டி அன்பர்களும் நியமிக்கப்பெற்று முயன்று வருகின்றனர். அன்பர்களனை வரும் இவ்வறப்பணிக்கு பெரும் பொருளுதவி புரிந்து திருப்பணியை முற்றுவிப்பது முக்கிய கடமையாகும்.

## *முடிப்புரை*

இத்தகைய புராணச் சிறப்பும், சரித்திரச் சிறப்பும் வாய்ந்த பழையாறைத் தலத்திற்கு அன்பர்களனைவரும் வந்து ஸ்ரீ சோமகலாநாயகி சமேத சோமகலா நாதரை வழிபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வை அடைய வேண் டுகிறோம்.

திருச்சிற்றம்பலம்

தாழி யோங்குமலர்க் கண்ணவர் தண்ணடி
பாழி யோங்குபுன லார்பழை யாற்றுள்
காழி நின்றமதி யான்மதி சேர்ந்து
வாழி என்று வணங்க வினைவாரா.

—பெருந்தொகை-2122.

—*—

உ

திருச்சிற்றம்பலம்

# திருப்பழையாறைத் திருமுறைகள்

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரம்

திருக்ஷேத்திரக்கோவை

### இரண்டாம் திருமுறை

பண் - இந்தளம்

.........................................

ஆறை வடமாகறல் அம்பர் ஐயாறணியார்
பெருவேளூர் விளமர்தெங்கூர்
சேறை துலைபுக லூரகலாதிவை காதலித்
தானவன் சேர்பதியே.

### மூன்றாம் திருமுறை

பண் - சாதாரி

பாடல்மறை சூடல்மதி பல்வளையொர்
பாகம்மதில் மூன்றோர் கணையால்
கூடஎரி யூட்டியெழில் காட்டிநிழல்கூட்டு
பொழில்சூழ் பழசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசரம்
மேயகடி கட்டரவினர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.

காலைமட வார்கள்புன லாடுவது
கௌவைகடி யார்மறுகெலாம்
மாலைமணம் நாறுபழை யாறைமழ
பாடியழ காயமலிசீர்ப்

பாலையன நீறுபுனை மார்பனுறை
பட்டிசரமே பரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி
விண்ணுலகம் ஆளுமவரே.

தடுக்கினையி டுக்கிமட வார்களிடு
பிண்டமது வுண்டுழல்தரும்
கடுப்பொடியு டற்கவசர் கத்துமொழி
காதல்செய்தி டாதுகமழ்சேர்
மடைக்கயல்வ யற்கொள்மழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
படைக்கொருக ரத்தன்மிகு பட்டிசர
மேத்தவினை பற்றறுதலே.

மந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி
ஞானசம்பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்.

—*—

# திருநாவுக்கரசர் தேவாரம்

## ஐந்தாம் திருமுறை. திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னன்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னர்பொழி லாறை வடதளி
நிலையி னனடி யேநினைந் துய்மினே.

மூக்கி னல்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னர்குலந் தூரறுத் தேதனக்
காக்கி னனணி யாறை வடதளி
நோக்கி னர்க்கில்லை யால்அரு நோய்களே.

குண்ட ரைக்குண மில்லரைக் கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம லன்றனை
அண்ட ரைப்பழை யாறை வடதளிக்
கண்ட ரைத்தொழு துய்ந்தன கைகளே.

முடைய ரைத்தலை முண்டிக்கும் மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்குமென் னுள்ளமே.

ஒள்ள ரிக்கணார் முன்னமண் நின்றுணும்
கள்ள ரைக்கடிந் தகருப் பூறலை
அள்ள லம்புன லாறை வடதளி
வள்ள லைப்புகழத் துயர் வாடுமே.

நீதி யைக்கெட நின்றம ணேயுணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே.

திரட்டி ரைக்க வளந்திணிக் குஞ்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு மான்றனை
அருட் டிறத்தணி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழத் தீவினை தீருமே.

ஓதி னெந்தெழுத் தஞ்சுணா ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை வட தளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே.

வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினன்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே.

செருத்த னைச்செயுஞ் சேணரக் கன்னுடல்
எருத்திறவிர லாலிறை யூன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே.

திருச்சிற்றம்பலம்

——

பாடுவார் பாடலுகப் பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற் கரியாய் போற்றி
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும்ஆன் ஐந்தும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

நல்லூரே நன்றாக நட்டமிட்டு நறையேற்றைப்
பழையாறே பாய ஏறிப்
பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே
பலர்காணத் தலையாலங் காட்டி னூடே
இல்லார்ந்த பெருவேளூர்த் தளியே பேணி
யிராப் பட்டீச் சரங்கடந்து மணற்கால்புக்கு
எல்லாருந் தளிசாத்தங் குடியிற் காண
இறைப் பொழுதில் திருவாரூர் புக்கார்தாமே.

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டம் கோகரணம் கோடிக்காவும்
முல்லைப் புறவம் முருகன்பூண்டி முளையூர்
**பழையாறை** சத்தி முற்றம்
கல்லில் திகழ்சீரார் காளத்தியுங் கயிலாய
நாதனையே காணலாமே.

நள்ளாறும் **பழையாறும்** கோட்டாற் றேடு
நலந்திகழும் நாலாறுந் திருவையாறும்
தெள்ளாறும் வளைக்குளமும் தளிக்குளமு நல்
லிடைக்குளமும் திருக்குளத்தோடஞ்சைக்களம்
விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா
கோலக்கா ஆனைக்கா வியன் கோடிக்கா
கள்ளார்ந்த கொன்றையான் நின்ற ஆறும்
குளம் களம்கா என அனைத்துங் கூறுவாமே.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

**ஏழாந் திருமுறை** பண்—கொல்லி

முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் திருவாரூர்
பந்தையூர் **பழையாறு** பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமா னிடையா றிடை மருதே.

அங்கமோதியோ ராறை மேற்றளி
நின்றும் போந்து வந்தின்னம்பர்
தங்கினோமையு மின்னதென்றிலர்
ஈசனோரெமு நெஞ்சமே
கங்கு லேமங்கள் கொண்டு தேவர்கள்
ஏத்தி வானவர் தாந்தொழும்
பொங்குமால் விடையேறி செல்வப்
புறம்பயந் தொழப் போதுமே.

திருச்சிற்றம்பலம்.

## பதினொன்றாந் திருமுறை.

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த

### திருத்தொண்டர் திருவந்தாதி

மிண்டும் பொழிற் பழையாறை யமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்கு நல்லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வ முந்தன்னை
துண்டமதி நுதலாளையுமீந்த தொழிலினனே. [யுந்தன்

## பன்னிரண்டாம் திருமுறை

### பெரிய புராணம்

(திருநாவுக்கரசர் புராணம்)

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி யன்பினோடு
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப்
போற்றியருந் தமிழ்மாலை புனைந்து போந்து
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முத்தத்திற் சென்று சேர்ந்தார்.

நல்லூரி னம்பரருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் டலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண்டமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
யல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்
[திறைஞ்சி.

செய்ய சடையார் பழையாறை யெய்த
 வதனிற் செல்பொழுதின்
மைய லமணர் மறைக்கவட தளியின்
 மன்னுஞ் சிவனுரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட
 வாற்று லமணர்கள்தம்
பொய்கொள் விமான மெனக்கேட்டுப் பொருத
 வுள்ள மிகப் புழுங்கி.

அந்த விமானந் தனக்கருகா
 வாங்கோரிடத்தின் பாங்கெய்திக்
கந்த மலருங் கடிக்கொன்றை
 முடியார்செய்ய கழலுன்னி
மந்த வமணர் வஞ்சனையால்
 மறைத்த வஞ்ச மொழித்தருளிப்
பந்தங் கொண்ட குண்டர்திறம்
 பாற்றுமென்று பணிந்திருந்தார்.

வண்ணங் கண்டு நானும்மை வணங்கி
 யன்றிப் போகேனென்று
எண்ண முடிக்கும் வாகீசர் இருந்தார்
 அமுது செய்யாதே
அண்ண லாரு மதுவுணர்ந்தங் கரசு
 தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவி
 லருளிச் செய்கின்றார்.

அறிவி லமணர் நமை மறைப்ப
 விருந்தோம் என்று அங்கடையாளம்
குறியறியச் செய்தருளி நம்மை
 அரசுகும் பிடுவா

நெறியி லமணர்தமை யழித்து
நீக்கிப் போக்கென் றருள் புரியச்
செறிவி லறிவுற் றெழுந்தவனுஞ்
செங்கை தலைமேற் குவித்திறைஞ்சி.

கண்ட வியப்பு மந்திரிகட் கியம்பிக்
கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமா னருள் செய்த
வடையாளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக் குறித்து
வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை யடிவணங்கித்
தொக்கவமணர் தூர றுத்தான்.

ஆனை யினத்திற் றுகைப்புண்ட
வமணு யிரமும் மாய்ந்ததற்பின்
மேன்மை அரசன் ஈசற்கு
விமான மாக்கி விளக்கிய பின்
ஞன வழிபாட் டர்ச்சனைக்கு
நிபந்தமெல்லாம் அமைத் திறைஞ்ச
ஞான வரசும் புக்கிறைஞ்சி
நாதர் முன்புபோற்றுவார்.

தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி
யமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினுல் மறைக்
கவொண்ணு மோவென்னும்
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள்
விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே
யிலைகொள் சூலப் படையார்சே
ரிடங்கள் பிறவுந்தொழுதணைவார்.

## திருஞானசம்பந்தப் புராணம்.

சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீண் மதிளாறை மேற்றளிசென் றெய்தினர்.

திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாள னடிவணங்கி உருகியவன் பொடுபோற்றி
மருவாருங் குழன்மலையாள் வழிபாடு செய்யவருள்
தருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார்.

அப்பதியி லமர்கின்ற வாளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியிற் சென்றிறைஞ்சி
ஒப்பரிய தமிழ்பாடி உடனமருந் தொண்டருடன்
எப்பொருளு மாய்நின்றார் இரும்பூளை எய்தினர்.

## ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம்

செம்பொன் மேருச் சிலைவளைத்த
சிவனு ராறை மேற்றளியில்
நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி
நாளுமகிழ் வார்க்கருள்கூட
உம்பர் போற்றும் தானங்கள்
பலவும் பணிந்து போந்தணைவார்
இம்பர் வாழ இன்னம்பர்
நகரைச் சேரவெய்தினர்.

திருச்சிற்றம்பலம்.

——

## ஸ்ரீ அருணகிரிநாதரருளிய திருப்புகழ்

தோடுற்றுக் காதள வோடிய
வேலுக்குத் தானிக ராயெழு
சூதத்திற் காமனிராசத—விழியாலே

சோடுற்றத் தாமரை மாமுகை
போலக்கற் பூரமளாவிய
தோல் முத்துக் கோடெனவீறிய—முலைமானுர்

கூடச்சிக் காயவ ரூழிய
மேபற்றிக் காதலி னேடிய
கூளச்சித் தாளனே மூளனே—வினையேனைக்

கோடுத்துத் தாயென நீயொரு
போதத்தைப் பேசவ தாவருள்
கோடித்துத் தானடி யேனடி—பெறவேணும்

வேடிக்கைக் காரவு தாரகு
ணபத்மத் தாரணி காரண
வீரச்சுத் தாமகுடாசமர்—அடுதீரா

வேலைக்கட் டாணி மகாரத
சூரற்குச் சூரனே வேல்விடு
வேழத்திற் சீரருளூறிய—விளையோனே

ஆடத்தக் காருமை பாதியர்
வேதப்பொற் கோவண வாடையர்
ஆலித்துத் தான ருளூறிய—முருகோனே

ஆடப்பொற் கோபுரமேவிய
ஆடிக் கொப்பா மதிள் சூழ்பழை
ஆறைப்பொற் கோயிலின்மேவிய-பெருமாளே

# பிரபந்தங்கள்

ஸ்ரீ உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் செய்தருளியவை.

## சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா.

... ... ... /... இட்டமிகும்
பார்மகிழ வாழும் பழையாறை யூர்மேவுஞ்
சோமகலா நாயகிசேர் சோமேசா.

## திருப்பதிகக்கோவை

கடைமுடியே ஓணகாந் தன்றளிகோட் டூர்வை
கன்மாடக் கோயிலிடை யாறு*பழையாறை*
வடதளிநற் றினைநகரம் கோணமா மலைசேர் வன்னியூர்
கருவிலிய னேகதங்கா வதநல்
லிடமேவு கடிக்குளநற் றிருக்களரென் றிவைகட்கு
இரும்பதிகம் ஒவ்வொன்றிசைத்திடுக விப்பாற்
குடவாயில் புனவாயில் தூங்கானை மாடங்
கோழம்ப மவளிவணல் லூர்கோலக்காவே.

## திருப்பதிக்கோவை

***ஆறை வடதளி*** திருவலஞ்சுழியே குடமூக்
கதனிற்கீழ்க் கோட்டங் காரோணநா கேச்சுரம்
கூறுமிடை மருதுகுரங் காடுதுறை நீலக்
குடிவைகல் மாடக்கோயி னல்லங்கோ ழம்பஞ்
சாறமரா வடுதுறைதண் டுருத்திதிரு வழுந்தூர்
சகம்புகழ்மா யூரம்விள னகர் பறியலூரே
வீறுசெம்பொன் பள்ளிநனி பள்ளிவலம் புரமே வியன்ற
காடாக்கூர் விளங்கு கடவூரே. [லைச்சங்

வடலூர் இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த

**விண்ணப்பக்கலிவெண்பா**

... ... .. தூட்டமயல்

நீங்குவிழை யார்தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்கு **பழை யாறை**யிலென் னுள்ளுவப்பே.

## பழம் பாடல்கள்

### பழையாற்றுமாதவன்

ஏறுயர் கொடியி னிருவிசும் பதிரு
 மெறிமுர சதிர்கடற்றானை
வீறுயர் மணிக்கால் வெண்குடை யோங்கு
 தண்டுறையின் பழையாற்று
மாறடு படிவ மதியுறுந் தருண
 மாதவன் ஏதமில் பாதம்
வீறடுகதிக ளாழ்கதி வீழ விளங்கிய
 விழுத்துணையாமே.

[யாப். வி, 95]

முழங்கு களியானை மூரிக் கடற்படை முறிதார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல்
 [விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட் சிறந்துநா ளுஞ்செய
எழுந்த சேதிகத்து ளிருந்தவண் ணல்லடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின் றவ்வினை துறந்துபோ மாலரோ.

Q 83 : 38 : 21193
N157



## நந்திக்கலம்பகம்

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியல் மாகளிற்றார் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து. [35ம் பாடல்]

## *வீர சோழியம்*

(யாப்புப்படலத்தில்வரும் உதாரணம்)

பவளச் செழுஞ் சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையு முலகிற் சிறந்து வாழ்கெனவே.

(அலங்காரப் படலத்தில் வரும் உதாரணம்)

இந்திரனேறக் கரியளித்தார்பரி யேழளித்தார்
செந்திருமேனித் தினகரற்குச்சிவ ஞர்மணத்துப்
பைந்துகி [illegible]க்களித்தார்பழை யாறைநகர்ச்
சுந்தரச் சோழரை [illegible]ரோப் பார்களித் தொன்னிலத்தே.

112761

குமரன் அச்சகம், கு. வடக்குவீதி, குடந்தை.

உ

திருச்சிற்றம்பலம்

## ***சிவாலய மான்மியக்கோவை***

நீர்மலிந் துறையு மகுடசோ மேசா
நினைத்தவை யீந்துகாத் தருள்வாய்
ஏர்பெறு சோம கலாம்பிகை தலைவா
வெழின்மதி யாண்ட வெம் மீசா
நேர்மன மில்லா வமணர்க ளொளிக்க
நேயவா கீசர்க்கா மீட்டும்
சேர் பழை யாறைவடதளி யமருஞ்
செல்வமே கருணை வாரிதியே.

திருச்சிற்றம்பலம்